சிறிலங்கா - மாற்றமடையும் அரசின் தோற்றம்

ஐயதேவ உயங்கொட
(தமிழில் ஜெயன் மகாதேவன்)

சிறிலங்கா அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் இடையில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் யுத்தம் பல பொது விவாதங் களையும்சர்ச்சைகளையும் தோற்றுவித்துள்ளது.

விடுதலைப் புலிகளைப் போரில் 'தோற்கடிப்பதற்கான' காலஎல்லை மீண்டும் மீண்டும் தொடர்ச்சியாகத் தள்ளிப் போடப்படுகின்ற செயலானது, யுத்ததின் தன்மை பற்றி ராஜபக்ஷ அரசாங்கம் கொண்டுள்ள புரிந்துணர்வின் மீது கடுமையான சந்தேகங்களை உருவாக்கியுள்ளது.

போரினால் ஏற்படும் மனித அவலங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாகக் கடைப்பிடிக்கப்படும் தொலைநோக்கற்ற மனப்பான்மையும் அவை பற்றிய அக்கறையை வெளிப்படுத்தும் சர்வதேச செயற் பாட்டாளர்கள் மீதான பகையுணர்வும் சர்வதேச அளவில் அரசாங்கத்தை ஓரளவுக்கேனும் தனிமைப் படுத்தியுள்ளன.

ஆங்கிலம் பேசும் அரசாங்கத்தின் பேச்சாளர்கள் (அவர் கள் அனைவரும் தாடி வைத்துள்ள மனிதர்கள்!) சர்வதேச மற்றும் பிராந்திய அதிகார மையங்களை தமது சொற்திறமையால் வென்றெடுக்க முடியும் என நம்புகிறார்கள் போல் உள்ளது.

யுத்தத்தினுள் அகப்பட்டு அவதியுறும் அப்பாவித் தமிழ் மக்களின் அவலநிலை, தமிழ் நாட்டில் பெரும் அரசியல் சர்ச்சையைக் கிளப்பியுள்ளது. அங்குள்ள அரசியல் கட்சிகள்நீண்டகாலமாக மறந்திருந்த ஒரு யதார்த்தத்தை தற்போது உணர்ந்து விழித்துக் கொண்டுள்ளன.

இந்தியாவின் மத்திய அரசாங்கம் இலங்கைத் தீவின் தமிழ் மக்களைப் படிப்படியாக அழித்தொழிக்க முனையும் ஒரு யுத்த அமைப்புக்கு ஆதரவையும் உதவியையும் தொடர்ந்து வழங்கி வருகின்றது என்பதே அந்த யதார்த்தம்.

சர்ச்சைக்குரிய அறிவிப்பு

சிறிலங்காவின் ராணுவத் தளபதி கனடாவில் இருந்து வெளிவரும் பத்திரிகையொன்றுக்கு தமது இதயத்தை திறந்து கொட்டியுள்ளதன் மூலம் ஒரு சர்ச்சையை உருவாக்கியுள்ளார்.

அந்தப் பேட்டியில் அவர் தெரிவித்துள்ள ஒரு முக்கியமான விடயம், இலங்கைத்தீவு பெரும்பான் மையின மக்களாகிய சிங்களவருக்கே சொந்தமான தென்றும் அங்கு வாழும் சிறுபான்மையினர் 'நியாயமற்ற' கோரிக்கைகளை முன்வைக்கக் கூடாது என்பதாகும்.

பேட்டி ஏற்படுத்திய பகிரங்க விவாதத்தில் இரண்டு விடயங்கள் கவனிக்கப்பட வேண்டியவை.

முதலாவது, ஒரு நாட்டின் இராணுவத் தளபதி அரசியல் உள்ளடக்கம் கொண்ட அறிக்கைகளை வெளியிடுவது சரியானதா? வழமையாக பொது மக்களைச் சார்ந்துள்ள அரசியல்வாதிகளாலேயே இத்தகைய அறிக்கைகள் வெளியிடப்படும். இரண்டாவது இராணுவத் தளபதியின் பேட்டியில் உள்ள அரசியல் ரீதியான உண்மைக்குப் புறம்பான தன்மை.

இலங்கைத் தீவு பல மொழி பேசும், பல மதங்களைப் பின்பற்றும், பல இன மக்களைக் கொண்டது என்ற உண்மையை மறுத்துரைக்கும் விதமாக அவருடைய பேட்டி அமைந்துள்ளது. தமிழ் முஸ்லிம் அரசியல் கட்சிகள் உட்பட, பொதுமக்கள் சார்ந்த செயற்பாட்டா ளர்கள் பலரும் இக்கருத்து மீதான தமது அதிர்ச்சியை வெளிப்படுத்தியுள்ளனர்.

அவர்களுடைய கருத்தின்படி சிங்களத் தேசிய வாதத் தின் தீவிரவாதிகளே இலங்கைத்தீவு சிங்களவருக்கு மட்டுமே 'சொந்தமானது' என்று கருதுபவர்கள். ஒரு நாட்டின் இராணுவத்தின் தலைமைப் பொறுப் பிலுள்ள ஒருவர் இத்தகையதொரு கடும் கண்டனத் துக்குரியஅறிக்கையை எவ்வாறு வெளியிட முடியும்?

அதுவும் இனங்களுக்கிடையே உக்கிரமானதொரு யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலகட் டத்தில் இந்தச் சர்ச்சையை இன்னொரு கோணத்திலும் பார்க்கலாம். இராணுவத் தளபதியின் கூற்றானது அது எவ்வளவுதான் கண்டனத்துக்குரியதாகவும்அரசியல் ரீதியாகத் தவறானதாகவும் இருந்த போதிலும் இலங் கையில் தொடர்ந்து நடைபெற்றுவரும் யுத்தம் தொடர்பான அரசியலின் சில இயங்குமுறைகளை அது வெளிப்படுத்துகிறது.

அவற்றில் இரண்டை உடனடியாக அவதானிக்கலாம். முதலாவது அரசியல் சார்ந்த முக்கியமான அறிவிப்புக்களை இராணுவத் தளபதி வெளியிடுவது அவர் தாம் இராணுவத்தைச் சேர்ந்தவர் என்பதை மறந்ததினால் அல்ல, மாறாக தாம் இராணுவத்தைச் சேர்ந்தவர் என்பதாலேயே அவர் இதனைச் செய்கிறார்.

பொதுமக்களுக்கும் இராணுவத்திற்கும் இடையே பாரம்பரியமாகப் பேணப்பட்டு வந்த தொழில் வேறுபாட்டின் சமநிலையானது நாட்டில் இப்போது மாற்றப்பட்டுவிட்டது என்பதை அவர் தெரிந்துகொண்டு விட்டார். தற்போதைய போரில் இராணுவம் பெரும் பங்கை ஆற்றும் நிலைமைகளின் காரணமாக இச்சமநிலை மாற்றமடைந்துள்ளது.

இரண்டாவது இயங்குமுறை என்னவெனில், சிறீலங்கா அரசு பெரும்பான்மை இனத்தினரால் கட்டுப்படுத்தப் படுவதுடன் இனரீதியாக ஒருபக்கச் சார்பானதுமாகும். தற்போதைய யுத்தத்தின் காரணமாக இத்தகைய கருத்து நிலைப்பாடுகள் மிகப் பலமானதாக வெளிப்படுகின்றன.

இராணுவ மேலாதிக்கம்

மக்களாட்சிக்குக் கட்டுப்பட்ட இராணுவத்தைக் கொண்ட ஒரு முன்னுதாரணமான மூன்றாம் உலக ஜனநாயக நாடாக சிறிலங்கா இனிமேலும் இல்லை என்ற நிலை தற்போது ஏற்பட்டு விட்டது என்பதைக் கவனித்தால், இராணுவத் தளபதியின் அரசியல் சார்ந்த அறிக்கைகளை நாம் புரிந்து கொள்ளலாம்.

இருபத்தைந்து வருடங்களுக்கு மேலாக நடைபெற்று வரும் உள்நாட்டு யுத்தம் பழைய சமன்பாட்டை இராணுவம் உட்பட்ட பாதுகாப்பு அமைப்புக்களுக்குச் சார்பானதாக மாற்றி விட்டது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் பதவிக் காலத்திலேயே இம்மாற்றத்திற்கான செயல்முறை ஆரம்பித்தது எனலாம். விடுதலைப்புலிகளுடனான போர் தொடர்பான அரசியல் தீர்மானங்களில் செல்வாக்கு செலுத்தக் கூடிய அதிகாரம் கொண்டதாக இராணுவம் தன்னை மாற்றிக் கொள்வதற்கான இடப்பரப்பை அவர் ஏற்படுத்திக் கொடுத்தார்.

இந்த மாற்றத்திற்கு உதாரணமாக தனது அரசாங்கத்தில் உதவிப் பாதுகாப்பு அமைச்சராகப் பதவி வகித்த நபரை- முன்னாளில் இராணவத்தினருக்கான தன்னார்வ உதவி அமைப்பில் கேணலாக இருந்தவரை- தனது மாமனார் என்ற ஒரே காரணத்தால் முழுநேர இராணுவத்தின் சீருடையை அணிய அனுமதித்ததுடன் சிறிது காலத்தின் பின் அவரை ஜெனரல் பதவிக்கும் உயர்த்தினார். தற்போதைய ஜனாதிபதியின் ஆட்சியின் கீழ் நிலைமை கொஞ்சம் மேலே போய்விட்டது.

முன்னாளில் இராணுவத்தில் கேணலாக பதவி வகித்த தனது தம்பியை அரசின் பாதுகாப்புத்துறை செயலாளராக நியமித்துள்ளார் மகிந்த ராசபக்ஷ.

இலங்கையில் யுத்தம் நடாத்தப்படும் முறையானது இவ்வாறு தொடரும் ஒரு குடும்ப விவகாரமாகவும் மாற்றப்பட்டுள்ளது. யுத்தத்தின் காரணமாக சிறிலங்கா அரசின் இயல்புநிலையில் ஏற்பட்டுள்ள மாற்றத்தை அரசியல் அவதானிகள் கவனிக்கத் தவறியிருக்க மாட்டார்கள்.

இம்மாற்றத்தின் தன்மை அண்மையிலேயே தெளிவாக வெளித்தெரியத் தொடங்கியுள்ளது. சிறிலங்கா தற்போது முற்றுமுழுதான 'தேசியப் பாதுகாப்பு அரசாக' மாற்றப்பட்டள்ளது. தொடர்ச்சியாக நடைமுறையிலி ருக்கும் அவசரகாலச் சட்ட விதிகளுக்கும் பயங்கரவாத ஒழிப்பு சட்டத்திற்கும் கீழ் அநேகமான அரசியல் உரிமைகளும் குடிமக்கள் உரிமைகளும் நிறுத்தப்பட்டு விட்டன.

அவசரகாலச் சட்டம் நடைமுறையிலுள்ள (நிரந்தர) சட்டமாக மாற்றப்பட்டு விட்டது. முன்னைய காலங் களைப் போலன்றி தற்போது பாதுகாப்பு அமைப்புக்களே யுத்தத்தின் சகல அம்சங்களையும் கட்டுப்படுத்துகின்றன. யுத்தம் ஊடகங்களில் எவ்வாறு வெளிப்படுத்தப்பட வேண்டும் விமர்சகர்களால் எவ்வாறு விமர்சிக்கப்பட வேண்டும் போன்ற அம்சங்களைக்கூட பாதுகாப்பு அமைப்புக்களே தீர்மானிக்கின்றன. பாரதூரமான பின்விளைவுகள் ஏற்படக்கூடும் எனப் பயந்து பத்திரிகையாளர்களும் அரசியல் விமர் சகர்களும் மிகச்சிறிய விமர்சனத்தைக்கூட பாதுகாப்பு அமைப்புக்கள் மீது வைக்கத் தயங்குகிறார்கள்.

கடந்த காலங்களில், ஆட்சியிலுள்ள அரசியல்வாதிகளே ஊடகங்களை கட்டுப்படுத்தினார்கள், அரசியல உரிமை களை மட்டுப்படுத்தினார்கள். தற்போது இராணுவம் இத்தகைய விவகாரங்களில் ஒரு செயற்பாட்டாளரின் பாத்திரத்தை மேற்கொண்டுள்ளது.

(தொடர்ச்சி 34ம் பக்கத்தில்)

Tuition for A-Levels, GCSE, Key Stages
Mathematics, Further Maths, Physics
Group and One-to-One Classes by Qualified Engineer, an experienced Teacher.
Contact Mob: ***0798 5680 995***

Double room wanted
Spacious double room needed in Croydon Area.
Please contact Ravi on ***07753836902***

Painfree *Clinic*

- **NHS** அழைப்பிற்காக காத்திருந்து அலுத்து விட்டதா ?
- கை, கால், கழுத்து, முதுகு வலியுடன் நெடுநாள் அவஸ்த்தையா ?
- மொழி பிரச்சினையால் உங்கள் வலியை முழுமையாக உணர்த்த முடியவில்லையா ?
- நமக்காக ஒன்று அருகில் இருந்தால் நன்று என நீங்கள் நினைப்பது எங்களுக்கு கேட்டது, . . .

அதனால் Bromley இல் ஒரு புதிய Physiotherapy சிகிசை அறை (வீட்டுச் சூழலில்)

மருத்துவமனை செல்கிறோம் என்ற எண்ணம் தோன்றா வண்ணம் முழுவதும் வீட்டுச் சூழலிலே !

உடனே முன்பதிவு செய்யுங்கள் நலம் பெறுங்கள் தொடர்புகளுக்கு:
07903501336 07794424147



PERMA
INTERNATIONAL SHIPPING LTD

உங்கள் தனிப்பட்ட பாவனைப்பொருட்கள், வாகனங்கள், வீட்டுப் பாவனைப்பொருட்கள், இயந்திர உபகரணங்கள், போன்றவற்றை தாயகத்திற்கோ பிற நாடுகளுக்கோ அனுப்ப விரும்புகிறீர்களா?

இங்கிலாந்தின் எப்பகுதியாயினும் உங்கள் பொருட்களை எம்மால் சேகரித்து பாதுகாப்புடன் வைத்திருந்து அனுப்ப முடியும் தரமான பிரத்தியேக சேவைக்கு நாடவேண்டிய இடம்

தொடர்புகளுக்கு: சிவம்
45C Crusoe Road, Mitcham, Surrey CR4 3AL
Tel: **020 8646 5222**, Mobile: **07939 550397**

ஒரு பேப்பர் ORU PAPER
உங்கள் வாசல் தேடி வர,
ஒரு வருடத்திற்கு £25 மட்டுமே!

SUBSCRIPTION FORM

Name: _____

Address : _____

_____

_____

Postcode: _____

Telephone: _____

Email: _____

மேலுள்ள விண்ணப்ப படிவத்துடன், £25 க்கு
"Oru Paper Ltd."" ன் பெயரில் காசோலையினையும்,
Oru Paper, 45'B' Crusoe Road, Mitcham,
Surrey CR4 3LJ, என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.